www.Padasalai.Net www.TrbTnpsc.com

ARIYALUR DISTRICT



பதிவு எண்: 1 0 3 0 1

# மூன்றாம் திருப்புதல் தேர்வு - 2025

## தமிழ்

வகுப்பு : 10

மதிப்பெண்கள் : 100
நேரம் : 3.00 மணி

பகுதி- I

I. அனைத்து வினாக்களுக்கும் பொருத்தமான விடையைக் குறியீட்டுடன் எழுதுக. 15X1=15

1. மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும் என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி
   அ) காப்பிய காலத்தில் மொழிப்பெயர்ப்பு இருந்தது
   ஆ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
   இ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
   ஈ) பக்தி இலக்கிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
2. சிவப்புச் சட்டை பேசினார் – இத்தொடரில் அமைந்துள்ள தொகையின் வகை.
   அ) பண்புத்தொகை ஆ) அன்மொழித்தொகை இ) உம்மைத்தொகை ஈ) உவமைத்தொகை
3. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்
   அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா
4. மெத்த வணிகலன் என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது
   அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
   ஆ) வணிகமும் பெரும் கலன்களும்
   இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
   ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்
5. இரவின் இருளமைதியில் இரைச்சலாய்ச் சில சுவர்க்கோழிகள், வறண்ட வானத்தின் இருண்ட புழுக்கம், மழைக்கு ஏங்கும் புவி, வெப்பச் பெருமூச்சு விடும், கசகசந்த உயிரினங்கள் – இத்தொடருக்கு ஏற்ற தலைப்பு
   அ) வனத்தின் நடனம் ஆ) உயிர்ப்பின் ஏக்கம் இ) நீரின் சிலிர்ப்பு ஈ) காற்றின் பாடல்
6. தமிழனத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
7. "ஏழ்மை வேடன் இறந்திலன் என்று எனை ஏசாரோ?" இங்கு வேடன் என்ற சொல் யாரைக் குறிக்கிறது?
   அ) இராமன் ஆ) இலக்குவன் இ) குகன் ஈ) கம்பன்
8. மேன்மை தரும் அறம் என்பது அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது ஆ) புகழ் கருதி அறம் செய்வது
   இ) மறுபிறப்பில் பயன்பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
   ஈ) பதில் உதவி பெறுவதற்காக அறம் செய்வது
9. "கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன்" – இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது
   அ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார் ஆ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்
   இ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்
   ஈ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்
10. உடன்பட்டுக் கூறும் விடை எது?
    அ) ஏவல் விடை ஆ) நேர்விடை இ) மறை விடை ஈ) சுட்டுவிடை
11. பின்வருவனவற்றுள் முறையான தொடர்
    அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடம் உண்டு
    ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடம் உண்டு
    இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடம் உண்டு
    ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடம் உண்டு



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி. (12,13,14,15)

அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல்வேள் வயிரியம் எனினே.

12. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்

அ) கூத்தராற்றுப்படை ஆ) காசிக் காண்டம் இ) முல்லைப்பாட்டு ஈ) மெய்க்கீர்த்தி

13. சிலம்பு – பொருள் தருக.

அ) ஓர் அணிகலன் ஆ) சிலம்பாட்டம் இ) சிலப்பதிகாரம் ஈ) மலை

14. இப்பாடலில் இடம் பெற்றுள்ள சீர்மோனை

அ) அலங்கு, சிலம்பு ஆ) நோனா, நோன்தாள் இ) சிலம்பு, பாக்கம் ஈ) நோனா, மான

15. எய்தி – இலக்கணக்குறிப்பு தருக.

அ) பெயரெச்சம் ஆ) வினையெச்சம் இ) பெயர்ச்சொல் ஈ) வினைச்சொல்

பகுதி – II பிரிவு - அ

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 21–க்கு கட்டாயமாக விடையுளிக்கவும். 4X2=8

16. வசன கவிதை குறிப்பு வரைக.

17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் உதவியாண்மை என்று குறிப்பிடுகிறார்.

ஆ) கரகாட்டததின் துணையாட்டமாக மயிலாட்டம் ஆடப்படுகிறது.

18. பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.

19. தாய்மொழியும், ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுதுக.

20. 'காய்மணியாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்' –உவமை உணர்த்தும் கருத்து யாது?

21. 'விடும்' என முடியும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக.

பிரிவு-ஆ

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5X2=10

22. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

23. ஒலித்து – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

24. கலைச்சொற்களை எழுதுக. அ) Folk Literature ஆ) Discussion

25. 'அங்கனக்குள்ளயே டீ சாப்டுட்டு, பேப்பர்ப் படிச்சிக்கிட்டு இரு, நா வெரசா வந்துருவேன்' – எழுத்து வழக்காக மாற்றுக.

26. பொருத்தமான தொடர் அமைக்க. வரப்போகிறேன், கொஞ்சம் அதிகம்.

27. எழுவாயைச் செழுமை செய்க.

அ. கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும் ஆ. மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்

28. அ. கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர் (கலவைத் தொடராக்கு)

ஆ. ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைப்பட்டது.

(தனிச்சொற்றொடர்களாக மாற்றுக)



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பகுதி – III பிரிவு - அ

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2X3=6

29. 'மாலவன் குன்றம் போனாலென்ன வேலவன் குன்றமாவது வேண்டும்' இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

30. இளம்பயிர் வகை எவையேனும் மூன்றனைத் தொடரில் அமைத்து எழுதுக.

**31. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

இவ்வுலகை இதுவரை மென்பொருள் ஆண்டு கொண்டிருக்கிறது; இனிமேல் செயற்கை நுண்ணறிவுதான் ஆளப்போகிறது. இதழியலில் செயற்கை நுண்ணறிவு குறிப்பிடத் தகுந்த மாறுதல்களைச் செய்து வருகிறது. அவற்றுள் விந்தையான ஒன்று. இயல்பான மொழி நடையை உருவாக்குதல் என்னும் மென்பொருள். அதற்கு 'வேர்டு ஸ்மித்' (எழுத்தாளி) என்று பெயர் வைத்திருக்கிறார்கள். தகவல்களைக் கொடுத்தால் போதும், வேர்டு ஸ்மித் அழகான கட்டுரையைச் சில நொடிகளில் உருவாக்கி விடும்.

i) எந்தத் துறையில் செயற்கை நுண்ணறிவு குறிப்பிடத் தகுந்த மாறுதல்களைச் செய்து வருகிறது?

ii) இயல்பான மொழி நடையை உருவாக்கும் மென்பொருளின் பெயர் என்ன?

iii) இந்த உலகத்தை இனி ஆளப்போவது எது?

பிரிவு – 3

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2X3=6

32. பிள்ளைத் தமிழ் – நூற்குறிப்பு வரைக.

33. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

34. அ) 'அருளைப் பெருக்கி' எனத் தொடங்கும் நீதிவெண்பா பாடலை அடிபிறழாமல் எழுதுக.

(அல்லது)

ஆ) 'நவமணி வடக்கயில்' எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

பிரிவு – 3

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2X3=6

35. தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.

36. மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

37. கொண்டு கூட்டுப் பொருள்கோளைச் சான்றுடன் விளக்குக.

பகுதி – IV

(மதிபெண்கள்: 25)

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5X5=25

38. அ) மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தினை விளக்குக.

(அல்லது)

ஆ) முல்லைப் பாட்டில் இடம்பெற்றுள்ள கார்காலச் செய்திகளை விவரி.

39. அ) பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல் குறித்த செயல்திட்ட வரைவு ஒன்றினை உருவாக்கி அதற்குத் தலைமையாசிரியரின் ஒப்புதல் பெறக் கடிதம் ஒன்றினை எழுதுக.

(அல்லது)

ஆ) தரமற்ற உணவு விடுதி மீது நடவடிக்கை எடுக்கக்கோரி, உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



40\. கொடுக்கப்பட்ட நூலகப்படிவத்தை பூர்த்தி செய்யவும் .

கடலூர் மாவட்டம், பாரதியார் நகர், கம்பர் தெருவிலுள்ள 112 ஆம் இலக்க வீட்டில் குடியிருக்கும் நிலவனின் மகள் பூங்குழலி, நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் படிக்கிறார். அவர் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினராகச் சேர்ந்து கால்பந்து விளையாட்டில் பயிற்சி பெற விரும்புகிறார். தேர்வர், தம்மை பூங்குழலியாகக் கருதி, கொடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் சேர்க்கைப் படிவத்தை நிரப்புக.

41\. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



42\. அ) தொலைக்காட்சி, திறன்பேசி, காணொளி விளையாட்டு, சமூக ஊடகம் ஆகியவற்றில் மூழ்கிக் கிடப்பவர்களை நெறிப்படுத்திட நீங்கள் செய்யும் முயற்சிகளை எழுதுக. (அல்லது)

ஆ) மொழியாக்கம் செய்து தலைப்பிடுக.

TheruKoothu is as its name indicates a popular form of theatre, performed in the street. It is perfromed by ruralarists. The Stories or derived from epics like Ramayana. Mahabharata and others ancient Puranas.There are more songs in the play with dialogues improvised by the artist on the spot. Fifteen to twenty actors with a small orches tra forms a Koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.

## பகுதி – V

(மதிப்பெண்கள் – 24)

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3X8=24

43\. அ) விருந்தனரைப் பேணுதல், பசித்தவருக்கு உணவிடல், போன்ற தமிழர் பண்பாடு இன்றைய சூழலில் உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலையும் பசித்து வந்த ஒருவருக்கு நீங்கள் உணவிட்ட செயலையும் அழகுற விவரிக்கவும். (அல்லது)

ஆ) சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

44\. அ) புயலிலே ஒரு தோணி, கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில் தோணிபடும் பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன? (அல்லது)

ஆ) அழகிரி சாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

45\. அ) நிகழ்கலை வடிவங்கள் – அவை நிகழும் இடங்கள் – அவற்றின் ஒப்பனைகள் – சிறப்பும் பழைமையும் – மக்கள் கலைகள் அருகி வருவதற்கான காரணங்கள். அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன – இக்குறிப்புகளைக் கொண்டு கட்டுரை வரைக. (அல்லது)

ஆ) 'சான்றோர் வளர்த்த தமிழ்" என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com